(i) நகரில் உள்ள மொத்தம் சுமார் 50,000 கிணறுகளில் அந்த மலேரியா கொசு புழு ஒழிப்பு பணியை மேம்படுத்துதல் ;

(ii) நோய்க்கு இலக்கான இடங்களைக் கண்காணித்தல் ;

(iii) சென்னை மாநகராட்சி முழுவதிலுமுள்ள மருத்துவ மனைகளிலும் மருத்துவ இல்லங்களிலும், மாநகராட்சி மருந்தகங்களிலும் இரத்தத் தடவல்களை சேகரிக்க பணியாளர்களை நியமிப்பதன் மூலம் கண்காணிப்பு வேலையை மேற்கொள்ளுதல் ;

(iv) நோய் தொற்றிய இடங்களில், டி.டி.டி. மருந்து தெளித்தலும், எல்லா வகை மலேரியா நேர்வுகளுக்கும் அடிப்படை மருத்துவம் செய்தலும் ஆகும்.

THIRU K. M. SUBRAMANIAM : In spite of the fact that excellent work is being carried on by Malaria Eradication Programme, is the Government aware that mosquitoes are increasing in geometrical proportions because the drainage constructed in the City is only for 6 lakhs of people and today the total population is about 20 lakhs. Can the Government do anything to being down this mosquito nuisance, in view of this particular important fact?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தற்பொழுது நடைபெற்றுவரும் இந்த மலேரியா ஒழிப்புப் பணி என்பது மெயின்டனென்ஸ் ஸ்டேஜ் என்ற அளவில் மேலும் வளராமல் ஒரு கட்டத்தில் நிறுத்தப்பட்டு பாதுகாக்கப்படும் நிலையில் நடைபெறுகிறது. அது ஏறக்குறைய ஸ்கெலிட்டன் சர்வீஸ் என்று சொல்லும் அளவிற்கு ஒரு அளவு குறிப்பிட்ட சிறு எண்ணிக்கை உள்ளவர்கள் நடத்துகிறார்கள். பெரும் அளவில் நடைபெறக்கூடிய அளவில் திட்டத்தை ஏற்று நடத்த, எராடிகேஷன் ப்ரோகிராம் என்ற முறையில் இன்டென்சிவ் புரோகிராம் நடத்த இப்பொழுது மாநகராட்சி விண்ணப்பித்திருக்கிறது. மாநில அரசு ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது. மத்திய அரசாங்கமும், பம்பாய், கல்கத்தா, டெல்லி முதலிய நகரங்களுக்கு அவர்கள் தரும் அதே ஒத்துழைப்பை சென்னை நகருக்கும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படி அந்த உதவியைத் தர இசைந்தால் முழு அளவில் இந்தத் திட்டம் சென்னை நகரில் நடைபெற வாய்ப்பு இருக்கிறது.

Regional Family Planning Training Centre

* 131 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Regional Family Planning Centre has started functioning in Madras ;

(b) if so, the details thereof; and

(c) the places where such centres are functioning in this State?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) சென்னையிலுள்ள அரசினர் மேல்நிலைப்படுத்தப்பட்ட மண்டல குடும்பக்கட்டுப்பாடு பயிற்சி நிலையம், 1965-ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

(இ) இப்பயிற்சி நிலையத்தில் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் வேலை பார்க்கும் மருத்துவ அதிகாரிகளுக்கும் மற்றும் பல்வேறு ஊழியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(உ) இதைப்போலவே மற்றொரு நிலையம், சேலத்தில் இயங்கி வருகிறது. மூன்றாவது நிலையம் ஒன்று மதுரை காந்தி கிராமில் கிராமிய நல, குடும்ப நல நிலையம் என்ற தனியார் நிறுவனத்தால் நடத்தப்படுகிறது.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, வட்டார குடும்ப நலத் திட்டத்தில் சென்னை போன்ற பெரிய இடங்களில் ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால், இப்பொழுது குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் நமது அரசு எடுத்திருக்கும் வேகத்திற்கேற்ற வகையில் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையத்தோடு இணைத்து இந்த வட்டார நிலையத்தை ஏற்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அந்த ஆரம்ப சுகாதார நிலையம், குடும்பக் கட்டுப்பாட்டு மருத்துவ மனைகளில் பணியாற்றுபவர்களுக்குப் பயிற்சியளிக்கும் எல். டி. காலேஜ் என்ற வகையில் டிரெயினிங் காலேஜ். டிரெயினிங் காலேஜ் எல்லாக் கிராமங்களிலும் ஏற்படுத்த வேண்டுமென்றால் ஒன்றும் நடக்காது. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணியாற்றுபவர்களுக்கு ஒரு கல்லூரிபோல் பயிற்சி அளிக்கப்படும் ஒரு நிலையம். தமிழகத்தில் மூன்று இடங்களில் ஏற்படுத்த மத்திய அரசு மக்கள் தொகை அடிப்படையில் ஒப்புக்கொண்டு இருக்கிறது, அந்தத் திட்டம் இப்பொழுது நடைபெற்று வருகிறது.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, குடும்ப நலத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்துவதன் காரணமாக நாடாளுமன்றத்தில் நமக்கு ஒரு இடம் போய்விட்டது உண்மையா ? அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

மாண்புமிகு திரு. க அன்பழகன்: அப்படிப்பட்ட கேள்வியை இதிலிருந்து எழுப்புவது உள்ளபடியே அவ்வளவு பொருத்தமானது அல்ல.